**செய்தி வெளியீடு எண்:901** **நாள்: 13.10.2010**

**சிறந்த ஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை**

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான (ADATA FOUNDATION) நிதியிலிருந்து 2010–11 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆதிதிராவிடர்/ஆதிதிராவிடர் கிருத்துவர்/ பழங்குடியினர் பிரிவைச்சாந்த 10 எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுத்து நிதிஉதவி வழங்கப்பட உள்ளது. தவிர ஆதிதிராவிடர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கு பரிசு வழங்கப்படும். இதற்கான நூல் வெளியிட ரூ.20.000/– வரை நிதியுதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள், போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இது குறித்த விவரங்களை தமிழக அரசின் **tn.gov.in** என்ற இணையதளத்தில் (website) அறிந்து கொள்ளலாம். மேலும் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

முறையான விண்ணப்பத்துடன் படைப்புகள் எழுத்து வடிவிலும் குறுந்தகடு (CD) வடிவிலும் அரசுக்கு வந்து சேர கடைசி நாள். 15.12. 2010.

அனுப்ப வேண்டிய முகவரி<br>
ஆணையர்,<br>
ஆதிதிராவிடர் நலம்,<br>
சென்னை –5.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலிந்த/சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதிஉதவி வழங்கும் திட்டம்

## விண்ணப்பப்படிவம்

1. நூலாசிரியர் பெயர்/முகவரி :

2. பிறந்த நாள்/அகவை :
(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)

3. நூலின் பெயர் :

4. நூலின் கருப்பொருள் :

5. தற்போதைய தொழில் விவரம் :

6. அரசிடமிருந்து பெற விரும்பும் நிதி உதவித்தொகை (ரூ.20,000/– க்கு மிகாமல்) :

7. இந்நூல் வெளிவருவதால் சமுதாய வளர்ச்சிக்கு பயன்படும் விவரம் (தேவைப்படின் தனித்தாளில் எழுதி அனுப்பலாம்) :

விண்ணப்பதாரர் ஒப்பம்

நாள்:

## உறுதிமொழி

இவ்விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள படைப்பு எனது சொந்த படைப்பு நான் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிருத்துவர்/ பிற வகுப்பபைச் சார்ந்தவர் என சுயசான்றுரை அளிக்கிறேன்.

கையொப்பம்

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலிந்த/சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதிஉதவி வழங்கும் திட்டம் வரைமுறைகள்

1. நிதி உதவி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் அதற்கான அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, சிறந்த படைப்புகள் தேந்தெடுக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படும்.
2. ஒவ்வோர் ஆண்டும் 10 ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிருத்துவர் எழுத்தாளர்களுக்கு நிதி உதவி அளிப்பதுடன் ஆதிதிராவிடர் பிரச்சனைகள் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஒருவருக்கும் இந்நிதி உதவி வழங்கப்படும்.
3. நிதி உதவியாக அதிக அளவில் ரூ.20,000/– வரை அல்லது நூல் வெளியிட ஆகும் செலவு இதில் எந்த தொகை குறைவாக உள்ளதோ அந்தத் தொகையே வழங்கப்படும்.
4. தமிழ் படைப்புகளுக்கு மட்டுமே நிதி உதவி வழங்கப்படும். மொழி பெயர்ப்புகள் அனுமதிக்கப்படமாட்டாது.
5. எம்.பில், பி.எச்.டி போன்ற படிப்புகளுக்கு தயாரிக்கப்படும் ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக (Exceptional Value) இருந்தாலன்றி நிதி உதவி வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர் தங்கள் படைப்புகளை குறுந்தகடுகளாகப் பதிவு செய்து (C.D) இரு நகல்களை அளிக்க வேண்டும்.
7. விண்ணப்பங்கள் மற்றும் இதர இணைப்புகள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.
8. தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்கள் தமது படைப்புகளை 90 பக்கங்களுக்கு குறையாமல் தயாரித்து 1000 பிரதிகளுக்கு குறையாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் வெளியிட வேண்டும்.
9. அனுமதிக்கப்பட்ட தொகையில் 50% முன்பணமாகவும், 50% பணியை முடித்தப்பின்பு வழங்கப்படும்.
10. நூல் அச்சிட்டப்பின்பு அதன் 50 பிரிதிகளை அரசுக்கு இலவசமாக அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு அளிக்கப்படவில்லையெனில் நிதி உதவி ஆணை நீக்கப்படுவதுடன் அளிக்கப்பட்ட நாளிலிருந்து முதல் தவணைத்தொகை 11% வட்டியுடன் திருப்பி கட்ட வேண்டும்.
11. நிதியுதவி பெற்ற நூல்களை வெளியிடும் போது இந்நூல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய பணிக்கான நிதி அமைப்பு மூலம் உதவிப்பெற்று வெளியிடப்படுகிறது எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
12. இத்திட்டம் தொடர்பாக பெறப்படும் விண்ணப்பங்கள் இறுதி முடிவு செய்வதற்கு வல்லுநர் குழு முழுமையான அதிகாரம் படைத்ததாகும்.
13. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எழக்கூடிய எவ்வித சிக்கல்களுக்கும் அரசால் மேற்கொள்ளக்கூடிய முடிவே இறுதியானதாகும். அம்முடிவை நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்தோ பிற வகையிலோ எதிர்க்கக்கூடாது.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**